IntSym 2019
9th International Symposium

# SOCIAL AND LIVELIHOOD CONDITION OF THE PEOPLE OF VILLAGE AMBALATHAR

**A.R.M. Mahsoom[176], M.H.A. Munas[177], A.M.M. Hijas[178] & K.D.M. Rifkan[179]**

Correspondence: mahsoomzahry92@gmail.com

**ABSTRACT**

The Socio-Economic development of a village always depends on the development of basic needs. Health development communication evolution, vocational diversity, education improvement thus. This study made to evaluate the problems faced by people of AMBALATHAR and to identify the reasons for those problems. The data and information are based on two types of data methods that are primary and secondary data. In this study, primary data was the main source but also used secondary data. The primary data were collected through direct observation, interview and discussion. Departmental reports, election records, research books used to collect secondary data. Collected data were analysed. Identified the problems and discussed solutions and tactics for these problems faced by the people of this study area. Such as water, transport, health, electricity, career, market & settlement. The conclusion of this study is the backwardness of Socio-Economic state. Therefore, this study recommends solutions such as the reconstruction of roads for transport increase of vocational diversity make arrangements for emergency treatments. Take legal actions to provide water supply for all enhance the self-employments.

**Keywords:** social, livelihood, village, Ambalathar

### ஆய்வு அறிமுகம்

சமூக, வாழ்வாதாரம் எனும் போது குறிப்பிட்ட பிரதேசத்தில் அல்லது குறிப்பிட்ட எல்லைக்குள் வாழும் மக்கள் எவ்வாறான சமூக, பொருளாதார நிலையில் தமது வாழ்க்கையை கொண்டு நடத்துகின்றனர் என்பது பற்றியதாகும். கிராம மக்களின் சமூக, வாழ்வாதார நிலை பற்றி அறிய, சமூக மற்றும் பொருளாதார காரணிகள் என்பவற்றைக் கண்டறிந்து அவற்றின் வளர்ச்சிப் போக்கு பற்றி அவதானிப்பதன் மூலமே அறிய முடியும்.

அந்த வகையில் ஒரு நாட்டினது வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி கிராமங்களின் விருத்தியில் தங்கியுள்ளன. கிராமங்கள் விருத்தி நிலையை எட்டும் போது நாடும் வளம்பெற வாய்ப்பு ஏற்படுகிறது.

‘‘**பொருளாதாரக் காரணிகளின் அடிப்படையில் மாத்திரம் ஒரு பிரதேசத்தின் அல்லது கிராமத்தின் அபிவிருத்தியை விளக்க முடியாது. அதற்கு பல்வேறு சமூக, பொருளாதார அரசியல் பண்பாட்டு மற்றும் வரலாற்றுக் காரணிகளின் கூட்டுச் செயற்பாடு அவசியம்**’’ என gunnar mydaland என்ற அறிஞர் குறிப்பிடுகிறார். (Myrdaland, j. 1968)

[176] Department of Arabic Language, South Eastern University of Sri Lanka.
[177] Department of Arabic Language, South Eastern University of Sri Lanka.
[178] Department of Arabic Language, South Eastern University of Sri Lanka.
[179] Department of Arabic Language, South Eastern University of Sri Lanka.


ஒரு நாட்டின் அபிவிருத்தியை அளவிடும் அளவுகோலாக கிராமங்களின் அபிவிருத்தி கருதப்படுவதனைப் போல் ஒரு கிராமத்தின் வளர்ச்சி, அபிவிருத்தி போன்றவற்றின் அளவுகோல்களின் முதன்மையானதாக வாழ்வாதார அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டிருப்பது நோக்கப்படுகின்றது.

வாழ்வாதாரம் என்பது வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு மூலமாகும். **நிலைத்துநிற்க்கூடிய வாழ்வாதாரமானது தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய வாழ்வாதாரத்தை கட்டி யெழுப்புவதற்கு அடிப்படையாக அமையும் இயற்கை, சமூக, பௌதிக, மானிட மற்றும் நிதி மூலதனம் ஆகிய ஐந்து சொத்துக்களில் தங்கியுள்ளன.** (Kristjanson, et al., 2005)

‘‘**உணவு, உடை, உறையுள் என அடிப்படைத் தேவைகளை வரையறை செய்திருந்தாலும் சமகால அறிஞர்கள் மேற்குறித்த முப்பெரும் தேவைகளுடன் சுகாதாரம், கல்வி , பாதுகாப்பு ஆகிய தேவைகளையும் இணைத்தே வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர்**’’. (Dentor, jhon,a.1990).

எமது இலங்கைத் திருநாட்டின் அபிவிருத்தியும், வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு கிராமங்களில் வாழும் 81.59 வீதமான சராசரி குடும்பங்களின் வாழ்க்கை தரத்தை பொருத்தே அமைந்துள்ளது. (Trading Economics 2016).





**ஆய்வுப்**

**பிரதேசம்**

648,057 மக்கள் தொகை கொண்ட அம்பாறை மாவட்டத்தில் அதிக மக்கள் கிராமங்களிலே வாழ்கின்றனர். (வுசயனபைெ நுஉழழெஅபைஉளஇ 2016). ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ள அம்பலத்தார் என்னும் கிராமம், விருத்தி அடைந்த கிராமங்கள், விருத்தி அடைந்து வரும் கிராமங்கள், கைவிடப்பட்ட கிராமங்கள் என்ற கிராம அபிவிருத்தி அளவுச் சுட்டிகளில் மூன்றாம் நிலைக் கிராமமாகவே காணப்படுகின்றது.

**பெயர் காரணிகள்**

இக்கிராமம் வேளாண்மை செய்யும் பூமியினை அதிகளவு நிலப்பரப்பால் கொண்டிருப்பதால் ‘வேளாமத்து வெளி’ என்ற பெயரினால் அழைக்கப்படும் அதே வேளை அக்கிராமத்தினூடாக பயணம் செய்வோர் இளைப்பாரிவிட்டுச்செல்ல அம்பலம் ஒன்று அமைந்திருந்த காரணத்தால் அம்பலத்தார் என்ற பெயரினாலும் அழைக்கப்படுகின்றது. எனினும் அம்பலத்தார் என்பதே உத்தியோக பெயராகப் பதியப்பட்டுள்ளது.

**எல்லை வரையரை**

இப்பிரதேசம் வடக்கே அம்பலத்தோயா கம்மானையையும், கிழக்கே வயல் வெளிகளாலும், தெற்கே அம்பத் ஓயாவையும், மேற்கே 184 கிராமத்தினையும், அம்பலத்தாரு ஓயா பிரதேசத்தினையும் சூழமைந்த பிரதேசமாகும்.

**சனத்தொகை**

இக் கிராமம் மொத்தமாக 45 குடும்பங்களை மாத்திரம் கொண்ட மிகச் சிரிய கிராமமாகும் (குக்கிராமமாகும்). அதில் 43 முஸ்லிம் குடும்பங்களும், 2 சிங்கள குடும்பங்களும் உள்ளடங்குகின்றன. தனி நபர்களாக பார்க்கும் போது 145 நபர்களைக் கொண்ட பிரதேசமாகும்.

**கால நிலையும் நில அமைப்பும்**

நவம்பர தொடக்கம் பெப்ரவரி வரையான மாதங்களில் மழைக் கால நிலை காணப்படுவதுடன் ஆண்டின் சராசரி மழைவீழ்ச்சி 1400 மில்லி லீற்றர் ஆகும். ஏனைய காலப்பகுதியில் வெப்ப காலநிலை நிலவுவதுடன் இக்காலப் பகுதியில் சராசரி வெப்ப நிலை 32ழூஉ ஆகக் காணப்படும். ( வளிமண்டல திணைக் களம், தலைமை அலுவளகம் கொழும்பு -07)

எனவே, அம்பலத்தார் கிராமத்து சமூக, வாழ்வாதார நிலையினை ஆய்வு செய்வதாக இவ்வாய்வு அமைந்துள்ளது

**ஆய்வுப் பிரச்சினை**

இலங்கை நாட்டின் வறுமை கிராமிய, பிரதேச, பொருளாதார, சமூக வாழ்வாதார அபிவிருத்திக்கான கொள்கை வகுத்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றுக்கு பிரத்தியேகமான திணைக்களங்கள் நாடு தழுவிய ரீதியில் இயங்கி வருகின்றன. குறிப்பாக 2015ம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் 100 விஷேட செயற்திட்டத்துடன் இணைந்ததாக வீடமைப்பு, சமுர்த்தி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட கிராமங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கிராமிய பிரிவின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி ஆகியவைகளுக்காக முன்னுரிமை முழுத்திவையும் உள்ளடக்கும் வகையில் 14,022 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மையப்படுத்தியிருந்தன. மேற்குறித்த எந்தவொரு அபிவிருத்திட்டமும் இக்கிராமத்தை வந்தடைந்ததாகத் தெரியவில்லை. அபிவிருத்தி அடைந்து வரும் அம்பாறை மாவட்ட தமன பிரதேச சபைக்கு உட்பட்டதும் அபிவிருத்தியில் தன்னிறைவு பெற்ற அக்கரைப்பற்று பிரதேசத்திற்கு மிக அண்மையில் அமைந்துள்ளதுமான இக் கிராமம் ஏனைய கிராமங்களுடன் ஒப்பிடுகையில் அன்றாட வாழ்வாதார நடவடிக்கைகளில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதும் அபிவிருத்தி என்ற அம்சத்தைக் காணமுடியாத ஓர் சூழ்நிலை இருப்பதும் ஆய்வாளர்களின் கவனத்தில் குவிந்தன. எனவே குறித்த ஏற்றத்தாழ்வுகள் சமூகக் கட்டமைப்பில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன?, ஏன் இக்கிராம மக்களின் தேவைகள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன.? போன்ற கேள்விகளே இவ் ஆய்வின் மையப் பிரச்சினையாகும்.

**ஆய்வின் முக்கியத்துவம்**

இவ்வாய்வு பின்வரும் காரணிகளால் முக்கிய இடத்தை பெரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. இன்று எமது முஸ்லிம் சமூகம் தொடர்பான சகல பிரச்சினைகளிலும் முதன்மையானதாக இருப்பு தொடர்பான பிரச்சினை காணப்படுகின்றது.

பலத்தார் கிராமம் பண்டைய கால முஸ்லிம்கள் வாழ்ந்ததற்கான அடையாளச் சின்னங்களைக் கொண்டிருக்கின்ற அடிப்படையில் இது எமது இருப்பு தொடர்பான ஆதாரமாகத் திகழ்கின்ற வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

2. நிலையான அபிவிருத்தி (*Sustainable Development*) தொடர்பான கருத்தாடல்களும் ஆய்வுகளும் பெருமளவு பேசப்படுகின்ற வேலையில் அம்பலத்தார் கிராமத்தின் நிலைகுறித்த ஆய்வுகள் இடம் பெறவில்லை என்ற வகையிலும், இக்கிராம மக்கள் நாள்தோறும் சந்திக்கும் சமூக, பொருளாதார, வாழ்வாதார பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வுகளை முன்மொழிவதற்கும், அவற்றை சமூக மயப்படுத்தி அது சார் செயற்பாட்டாளர்களது கவனயீர்ப்புக்குறப்படுத்துவதன் மூலம் இக்கிராமத்தை அபிவிருத்தியை நோக்கி நகர்த்துவதற்கு இந்த ஆய்வு துணை செய்யும் என்ற வகையிலும் இது முக்கியத்துவம் பெறுகின்றது.

**ஆய்வின் நோக்கங்கள்**

- அம்பலத்தார் கிராம மக்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளப்படுத்தல்.
- குறித்த பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருப்பதற்கான காரணங்களைக் கண்டறிதல்.

**இலக்கிய மீளாய்வு**

ஆய்வாளர்களது தேடலிற்குட்பட்ட வகையில் அம்பலத்தார் பிரதேசம் குறித்து செய்யப்பட்ட எந்த ஆய்வு முயற்சிகளையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. எனினும் சர்வதேச, தேசிய ரீதியாக இப்படியான தலைப்புக்களில் வெவ்வேறு பிரதேசங்களை மையப்படுத்தி ஆய்வு முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன

Arif, G. M. “A Study on Socio-Economic Conditions in Islamabath”. Volume-4, 348-456 pp, 2001.

இவ்வாய்வு வறுமை, வருமானப் பங்கீட்டு சமமின்மையைக் குறைத்து நலிவுற்ற குடும்பங்களை மேம்படுத்தி வாழ்க்கைத்தர உயர்வு ஏற்பட்டுள்ளதா? என அறிவதற்கு இஸ்லாமாபாத்தினை அடிப்படையாகக் கொண்டு 90 நகரங்கள், 210 கிராமங்களிலிருந்து 300 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு ஓர் சமூக பொருளாதார ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வுக்காக பயன்படுத்தப்பட்ட மாறிகளாக வேலை, வருமானம், வீட்டு வசதி, சொத்துக்கள், சுகாதாரம் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

Abhiman, D. “A Survey study on Socio-economic Condition in India, Reserve Bank India”. Volume-28, 313-345 pp, 1999

இந்தியாவின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை அறிவதற்காக அங்குள்ள 16 பெரிய மாநிலங்களில் சமூக, பொருளாதார ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு சமூக, பொருளாதார அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் பொருளாதார வளர்ச்சி, கல்வித்தரம், சுகாதார சேவை, பெண்களின் நிலை, போசாக்கு மட்டம், வீட்டின் தரம், தொடர்பாடல் போன்றன இந்தியாவின் சமூக பொருளாதார விருத்திச் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்தியுள்ளமையும் அறியப்பட்டுள்ளது.

Thayalini, K.,Jeyapiratheeba, A.(2014). சமூக பொருளாதார நிலை பற்றிய ஆய்வு: திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளிப் பிரதேச செயளாலர் பிரவினை மையப்படுத்தியது.

இவ் வாய்வில் சமூகக் காரணிகளில் கல்வியை நோக்கும் போது 52.7 வீதமான பெற்றோர் கல்வியறிவற்றோராகக் காணப்படுவதால், பாடசாலை இடைவிலகல் வீதம் அதிகமாகக் காணப்படுதல் கல்வி நிலை குறைவைக் காட்டுகின்றது. இப்பிரதேசத்தில் வீட்டுவசதி 78.7 வீதத்தினர் சொந்த வீட்டினைக் கொண்டிருப்பது போதுமாகக் காணப்படினும் இன்றும் சிலர் தகர வீடுகளிலும் தற்காலிகக் கொட்டில்களிலும் வாழ்கின்ற நிலைமை காணப்படுகின்றது. மின்சாரவசதியுடையோர் 93.3 வீதமாகவும் போகக்குவரத்து, சுகாதார மற்றும் தொலைத் தொடர்பு வசதிகளையுடையோர் 96.3 வீதமானவர்களாகவும் காணப்படுகின்றமை இவ்வசதிகள் ஓரளவிற்கு போதுமாகக் காணப்படுவதைக் காட்டுகின்றது. பொருளாதார காரணிகளில் வருவாய் நிலைக் குறைபாடு வெளிப்படுத்துகின்றது. ரூபா 5000 கீழ் வருமானம் பெறுபவர்கள் 22.7 வீதமாகவும், ரூபா 5001-10000 இடையிலான வருமானம் பெறுபவர்கள் 26.7 வீதமாகவும் காணப்படுகின்றனர். சேமிப்புள்ளவர் 59 வீதமாகவும் கடன் பெறுவோர் 35.7 வீதமாகவும் முதலீடு 18.7கண்டறியப்பட்டுள்ளது. இது பொருளாதாரக் காரணிகள் குறைவாக உள்ளதைக் காட்டுகின்றது.

uthaya kumar, s.s. , Rejinolt, i.(2014) யுத்தத்தால் இடம் பெயர்ந்து மீளக் குடியேறியவர்களின் வாழ்வாதாரங்களைப் பற்றிய ஒர் ஆய்வு.

இவ் ஆய்வின் ஊடாக மீளக் குடியமர்த்தப்பட்டவர்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளமையும் அவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் முழு வறுமையில் வாழ்கின்றமையும் வெளிப்படையாகப் புலப்படுகின்றது. இவர்களினுடைய வாழ்வாதார அபிவிருத்திக்கு பல்வேறு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட வாழ்வாதார உதவிகளும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு இல்லை என்பதுடன் அவை நிலைபேண்தன்மை அற்றவையாகவும் அமைந்துள்ளன என்பதும் தெளிவாகின்றது.

வினோதினி, p. , சுபாஜினி, u. (2014). இத்தாவில் கிராமத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தி பற்றி ஆய்வு.

‘இத்தாவில்’ கிராம மக்களின் சமூக பொருளாதார நிலைகளை கண்டறிதல், அபிவிருத்திக்கான உள்ளார்ந்த வளவாய்ப்புக்களை இனங்காணல் மற்றும் அபிவிருத்திக்கான பரிந்துரைகளை முன்மொழிதல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது. இவ் ஆய்விலிருந்து ஆய்வுப் பிரதேசத்தின் சமூக பொருளாதார நிலைகள் மற்றும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் கண்டறியப்பட்டு இதற்கான காரணங்கள், இப்பிரச்சினைகளால் ஏற்படும் விளைவுகள், அதற்கான தந்திரோபாயங்கள் என்பன முன்வைக்கப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் முடிவாக, இத்தாவில் கிராமமானது தற்போதைய நிலையில் சமூக, பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ளதுடன் இங்குள்ள வளவாய்ப்புக்கள் அனைத்துமே அழிக்கப்பட்டுள்ளன எனவும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே அப்பிரச்சினைகளுக்கான தீர்வுத் திட்டங்கள் இறுதியில் முன்வைக்கப்பட்டுள்ளதால் எதிர் காலத்தில் இப்பிரதேசத்தின் வளவாய்ப்புக்களை இனங்கண்டு அதன் மூலம் நிலையான சமூக, பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுத்து அம்மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த இவ் ஆய்வானது பயனுடையதாக அமையும்.

இவ்வாய்வானது மேற்குறித்த ஆய்வுகளில் இருந்து பிரதேசரீதியாகவும் பெறுபேறு ரீதியாகவும் வேறுபடுகின்றது. எனினும் ஆய்வாளர்களுக்கு ஆய்வுக் கட்டமைப்பினையும் ஆய்வு முறையியலையும் வடிவமைத்துக் கொள்ள மேற்குறித்த ஆய்வுகள் உதவியாக அமைந்துள்ளன.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்விற்காக முதல் நிலை தரவுகள், இரண்டாம் நிலை தரவுகள் ஆகியன சேகரிக்கப்பட்டன.

**மாதிரித் தெரிவு** :- இங்கு எளிய மாதிரி முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது அப் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடமிருந்து அம்பலத்தார் குடும்ப மக்களின் குடும்ப விவரப் பட்டியல் பெறப்பட்டு 45 குடும்பங்களில் சுமார் 20 குடும்பங்கள் மாதிரியாக எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு முதல் நிலைத் தரவுகளைத் திரட்டிக் கொள்ள நேர்காணல், நேரடி அவதானிப்பு போன்ற தரவு சேகரிப்பு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### நேர்காணல்

நேர்காணல் மூலம் மக்களின் சமூக, பொருளாதார, வாழ்வாதார நிலை மாத்திரமின்றி அம்மக்களின் பிரச்சினைகள், விருப்புவெறுப்புகள், உணர்வுகள், உளவியல் ரீதியான தாக்கங்கள், சமூக ரீதியான விளைவுகள் போன்றவற்றை அவதானித்து ஆய்வினை சரியான முறையில் மேற்கொள்ள உதவியாக இருந்தது. ஆய்வு தொடர்பான நேர்காணல் அப் பிரதேச கிராம உத்தியோகத்தர், பள்ளி வாசலின் தலைவர் மற்றும் நிர்வாகிகள், பாடசாலை அதிபர் போன்றோரிடமும் மேற்கொள்ளப்பட்டது.

### நேரடி அவதானிப்பு

ஆய்வுப் பிரதேசத்திற்கு சென்று அம்மக்களினுடைய சமூக, பொருளாதார நிலைகளையும், அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் பிரச்சினைகளையும் அவதானிக்க முடிந்ததுடன் ஆய்வுக்கான பகுப்பாய்வு முடிவுகளை மேற்கொள்ள அவதானம் முக்கிய தரவு சேகரிப்பு முறையாக காணப்பட்டது.

### கலந்துரையாடல்

ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள ஆண்களை அதாவது மூத்தவர்கள் இளைஞர்கள் என பெரும்பான்மையானவர்களை ஒரே நாளில் வெள்ளிக் கிழமை ஜும்ஆ தொழுகையின் பிற்பாடு ஒன்று சேர்த்து தகவல்களைப் பெறமுடிந்தது. இவ்வாய்வு சிறப்பாக முன்னெடுக்கப்பட அத்தரவுகள் உறுதுணையாக அமைந்ததுள்ளன.

ஆய்விற்கு உதவும் வகையில் இரண்டாம் நிலை தரவுகளாக பின்வரும் மூலாதாரங்களில் இருந்து தரவுகள் பெறப்பட்டன.

1. வரைபடங்கள் (அம்பாறை மாவட்ட புள்ளி விபரவியல் திணைக்கள இணைய தள பக்கங்கள்)
2. தேர்தலிடாப்புகள்
3. கிராம சேவகர் அலுவலக ஏடு
4. ஆய்வு நூற்கள்

**தரவு முன்வைத்தலும், பகுப்பாய்வும்**

**நோக்கம்-01**

கிராம மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளை பின்வருமாறு அடையாளப்படுத்த முடிந்தது.

**நீர்**

உலகின் எல்லா உயிர்களுக்கும் அத்தியவசிய வளமான மற்றும் எல்லா வளங்களுக்கும் அடிப்படை மூல வளம் என்றிருந்த போதிலும் 0.08 வீதமே உலகின் பயன்பாட்டு நீர்மூலமாகின்றன. எனவே குடிநீர்த்தேவை சுகாதார, விவசாயம் என்பவற்றுக்கான கனிசமான நீர்ப் பற்றாக்குறை நிலவுகிறது. குறித்த ஆய்வுப் பிரதேச மக்கள் தங்களுக்கு குடிநீர் உட்பட நாளாந்த பாவனைக்குரிய நீரைப் பெற்றுக் கொள்வதில் சவால்களை எதிர்கொள்கின்றனர். 45 குடும்பங்களில் பாதை ஓரமாகவுள்ள மூன்று வீடுகளுக்கும் மற்றும் பள்ளிவாயலுக்கும் இலங்கை நீர் விநியோக சபையினால் நீர்வழங்கப்பட்டுள்ளது. 42 வீடுகளில் ஒர் சில வீடுகளில் கிணறுகள் காணப்பட்ட போதிலும் வரட்சியான காலங்களில் அக்கிணறுகளும் வற்றிவிடுகின்றது. அப்படியான சந்தர்ப்பங்களில் தங்களது நாளாந்த பாவனைக்குரிய நீரைப் பெற்றுக் கொள்வதற்காக சிங்கள மக்களுக்கு சொந்தமான பொதுக் கிணறொன்றின் மூலமும், பள்ளிவாலின் மூலமும் நீரைப் பெற்றுக் கொள்கின்றனர். அவ்வாறும் முடியாத சந்தர்ப்பங்களில் அயல் கிராமங்களுக்கு சென்று நீரைப் பெற்றுக் கொள்கின்றனர். இப்படி நாளாந்தம் நீர் தொடர்பான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

**போக்குவரத்து**

குறித்த கிராம மக்கள் வழங்கிய தரவின் அடிப்படையில் அரச போக்குவரத்து ஏற்பாடுகளாக அக்கரைப்பற்றிலிருந்து அம்பலத்தார் கிராமத்திற்கு ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் அரச போக்குவரத்துச் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காலை 6:15 மற்றும் பகல் 12:00 க்கும் அந்த சேவை வழங்கப்பட்டுள்ளது. இது பல வகையிலும் கிராம மக்களது வாழ்வில் சிரமமேற்பட காரணமாய் அமைந்துள்ளது. அக்கிராம மக்கள் அரச போக்குவரத்தினை 90% பயன்படுத்துகின்றனர். தனியார் போக்குவரத்து மூலம் அக்கரைப்பற்று நகருக்கு தங்களது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள சுமார் 1000 ரூபாய்க்கும் அதிகமாக செலவாகுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

**சுகாதாரம்**

ஆய்வுப் பிரதேச மக்கள் எதிர் நோக்கும் அடிப்படையான பிரச்சினைகளில் முக்கியமான பிரச்சினையாக சுகாதாரப் பிரச்சினை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. சுகாதாரப்பிரச்சினை என்பதன் மூலம் இங்கு கருதப்படுவது நோய் ஏற்படும் போது 26km தூரத்தில் உள்ள அக்கரைப்பற்று வைத்தியசாலையை நாடிச் செல்ல வேண்டியதாகவுள்ளது. 100% ஆனோர் இப்பிரச்சினையை எதிர்கொள்கின்றனர். ஒழுங்கமைக்கப்படாத 3 km அடங்கலாக 26km தூரத்தில் வைத்தியசாலை அமைந்துள்ளதனால் உடனடி சிகிச்சை பெற வேண்டிய சந்தர்ப்பங்களிலும் மிகுந்த சிரமத்தை எதிர் நோக்குகின்றனர். அங்கு தனியார் வைத்தியசாலைகளோ, பகுதி நேர வைத்திய நிலையங்களோ, நாட்டு வைத்தியர்களோ இல்லாமையும் குறிப்பிடத்தக்கது. தனியார், அரச எனும் எந்த மருத்துவமனைகளை நாட வேண்டி வந்தாலும் அவை அக்கிராமத்தை விட்டும் மிகவும் தொலைவில் உள்ளதனால் உடனடி சிகிச்சை பெறுவது, தூர இடங்களுக்கு செல்வதற்கான செலவீனம், போக்குவரத்து வசதிகள் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

**மின்சாரம்**

மின்சார வசதியைப் பொறுத்தவரையில் பெறப்பட்ட தரவின்படி பெரும்பான்மையானோர் அதனைப் பெற்றுள்ளதுடன் 1 வீதமானோர் மின் இணைப்பற்று காணப்படுவதாகவும் ஆய்வாளர்களினால் அடையாளப்படுத்தப்பட்டது. ஆகவே இக்கிராமத்தில் மின்சார வசதி போதுமானதாக உள்ளது.

**கல்வி**

அம்பலத்தார் கிராமத்தின் கல்வி நிலையை அறிவதற்காக அங்குள்ள ஷேஃ.க் சிக்கந்தர் வலீயுள்ளாஹ் வித்தியாலயம் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. 1990களில் ஓலைக் குடிசையில் 1 ஆசிரியரைக் கொண்டு ஆரம்பமான இப் பாடசாலை தற்பொழுது 41 மாணவ(21) மாணவிகளையும்(20) 9 ஆசிரியர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அங்கு 1ம் ஆண்டு தொடக்கம் 9ம் ஆண்டு வரையில் மாணவர்கள் கற்கின்றார்கள். பாடசாலை மாணவர்களது வருகையின்மை, இடைவிலகல் ஆகிய காரணங்களினால் மாணவர்கள் கல்வியில் பின்தங்கியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அக்கரைப்பற்று மற்றும் வாங்காமம் ஆகிய பாடசாலைகளில் உயர்தரக் கல்வியினைத்(GCE O/L, A/L) தொடர்வோரின் தற்போதைய (2018 – October) எண்ணிக்கை நான்கு மாணவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

**தொழில்**

ஆய்வுப் பிரதேசத்தில் மக்களுக்கு பொருத்தமான தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்வதில் தடைகள் காணப்படுகின்றமை முக்கிய பிரச்சினையாக அடையாளம் காணப்பட்டது. குறிப்பாக இங்குள்ள மொத்த குடித்தொகையில் 90% வீதமானவர்கள் வறுமைப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுல் போன்றவற்றை திருப்திகரமாக பெற்றுக் கொள்ள முடியாதவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர். இந்த நிலையில் தமக்கென சுய தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்ள போதியளவு மூலதனம் இல்லாமை முக்கிய பிரச்சினையாக உள்ளது பல்வேறு நிறுவனங்கள் பல்வேறு உதவித் திட்டங்களை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுத்தும், இங்கு மக்களின் வாழ்வாதாரம் முன்னேற்றமடையாத நிலையில் உள்ளதாக அடையாளப்படுத்தப்பட்டது.

ஆய்வுப் பிரதேசத்தில் 99மு வீதமானவர்கள் சேமிப்பு பழக்கம் காணப்படாமையும் ஒரு முக்கிய பிரச்சினையாகும். அதற்கு வறுமானப் பற்றாக்குறை முக்கிய காரணமாகும். குறித்த கிராம மக்களிடம் பெற்ற தரவின்படி (பெரும்பான்மையானோர்) 94% விவசாயமே செய்கின்றனர். அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர்களுக்கு சொந்தமான வயல் காணிகளிலே (பொருத்த வெள்ளாமை) கூலி வேலை செய்கின்றனர். அறுவடையின் பின் 100 நெல் மூடைகளுக்கு 12 நெல் மூடைகள் கூலியாக கொடுக்கப்படுகின்றன. அவற்றை வைத்தே முழு வருட ஜீவனோபாயத்தை மேற்கொள்கின்றனர். இதுவே அவர்களது பிரதான வருமான வழியாகும். இது தவிர வரம்பு கட்டுதல், கரும்பு வெட்டுதல், தச்சு வேலை போன்ற நாளாந்த கூலி வேலைகளுக்கு 2% செல்வதாக தரவுகள் காட்டுகின்றன. வேலை செய்ய ஆற்றல் இருந்தும் வேலையற்றிருப்போரும் அங்குள்ளதை அவதானிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தமக்கென ஒரு சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்ள போதியளவு மூலதனமில்லாமை முக்கிய பிரச்சினையாக உள்ளது. இக்கிராம மக்களில் 9 நபர்களுக்கு சிங்கள பிரதேசத்துக்குள் இருக்கும் சுமார் 8 ஏக்கர் காணி அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. அக்காணிகளில் பருவ காலங்களுக்கு விவசாயம் செய்யப்படுகின்றது.

**சந்தை**

ஆய்வுப் பிரதேசத்தில் பெறப்பட்ட தரவின் படி மொத்த ஊருக்குமே மூன்று சில்லறைக் கடைகள் காணப்படுவதாகவும் அவற்றிலும் தேவையான பொருட்கள் பெற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது. மொத்த, சில்லரை வியாபார கடைகள் எதுவும் இல்லாத காரணத்தினால் அக்கரைப்பற்று நகரத்தை நாடி வரவேண்டிய தேவை உள்ளமையினால் பல சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

**வதிவிடம் (நிலம்)**

இக்கிராமத்தில் குடியிருக்கும் (100%) அக்கரைப்பற்று பிரதேச மக்களுக்கு சொந்தமான காணிகளை பாதுகாக்கவும் அவற்றில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் வெலிமட பிரதேசத்தில் இருந்து 1978ம் ஆண்டு 7 குடும்பத்தினர் அழைத்து வரப்பட்டு குடியமர்த்தப்பட்ட மக்கள் இன்று 43 குடும்பங்களாக அதிகரித்துள்ளன. இவர்களுக்கான வீடு வாசல்களை அமைத்துக் கொள்ள போதுமான காணி வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்பதும், அத்தகைய காணி வசதிகள் இல்லாதவர்கள் வேறு இடங்களுக்குச் சென்று குடியமரும் சூழல் உருவாகி வருவதாகவும் தகவல்கள் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளன. அத்துடன் தங்களது ஜனாஸாக்களை அடக்கம் செய்ய பிரத்தியேகமான காணியின்மையும் அந்த ஜனாஸாக்கள் இன்னும் பள்ளி வளாகத்திலேயே அடக்கப்பட்டு வருவதும் அவர்களது பிரச்சினையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

**தொலைத்தொடர்பு**

தரவின் படி பெறும்பாலானவர்கள் கைத்தொலைபேசி இணைப்பைக் கொண்டுள்ளனர். குறைவானவர்களே தொலைபேசி இணைப்பு இல்லை என பதிலளித்துள்ளனர். ஆகவே இங்கு கூடியளவானவர்கள் தொலைபேசி இணைப்புள்ளவர்களாகவே காணப்படுகின்றனர்

**நோக்கம் - 02**

மேற்குறித்த பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருப்பதற்கான காரணிகளைக் கண்டறிதல்

- ✓ போக்குவரத்து வசதி போதாமை என்ற பிரச்சினைக்கு பாதை சீர்திருத்தப்படாமல் இருப்பது ஒரு முக்கிய காரணமாகும்
- ✓ ஆன்மீகத் தலைவர்கள் ஐதீகம் சார்ந்த பணிகளுக்குள் தங்களை சுருக்கிக்கொண்டு இருந்தமையும் அக்கிராம அபிவிருத்தி முன்னேற்றம் குறித்து அம்மக்கள் சிந்திக்காதிருப்பதற்கான காரணியாகும்
- ✓ வாழ்வாதார பிரச்சினையாக கருதப்படும் தொழிலின்மைக்கான காரணியாக விவசாயத்தில் மாத்திரம் தங்களை ஈடுபடுத்திக் கொண்டமையும் தொழில் பன்முகத் தன்மையற்றுக் காணப்படுவதுமாகும்.
- ✓ அக்கிராமப் பள்ளிவாயல் நிர்வாகத்திற்கும் அவ்வூரில் பணி செய்த ஆன்மீகத் தலைமைகளுக்கும் சில நிர்வாக ரீதியான பிரச்சினைகள் இருந்ததாகவும் அதன் காரணமாகவே அரசியட் தலைமைகளோடு நேரடியாக தொடர்புள்ள குறித்த ஆன்மீகத் தலைவர்களே இந்த ஊரின் வளர்ச்சிக்கு தடையாக உள்ளனர் என்பதும் அறியப்பட்டது.
- ✓ பல்வேறு நிறுவனங்கள் பல்வேறு உதவித் திட்டங்களை ஆய்வுப்பிரதேசத்தை சூழ உள்ள பகுதிகளில் அறிமுகப்படுத்தியுள்ள போதிலும் இன்னும் ஆய்வு பிரதேசத்தை அடையாத நிலையிலையே உள்ளது.

- ✓ மாணவர்கள் ஒழுக்க ரீதியாக பின்னடைந்து காணப்படுகின்றனர். அப்பின்னடைவுக்கு கல்வி அறிவின்மை, பெற்றோரின் கல்விப்பின்னனி,
- ✓ மார்க்க அறிவின்மை ஆகியன காரணங்களாயின.

**முடிவுரை**

சமூக, வாழ்வாதார நிலை குறித்து செய்யப்பட்ட இந்த ஆய்வானது அம்பலத்தார் கிராம மக்களின் வாழ்வாதார நிலையையும், சமூக போக்கையும் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. வாழ்வாதார அபிவிருத்திக்கு பல்வேறு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட வாழ்வாதார உதவிகளும் அவர்களுக்குக் கிட்டுவதில்லை. எனவே, அவர்கள் எதிர்நோக்குவதாக அடையாளப்படுத்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த ஆய்வு உதவியாக அமையும் என்பது ஆய்வாளர்களது எதிர்பார்ப்பாகும்.

**முன்மொழிவுகள்**

- ➢ ஆன்மீக, ஒழுக்க பண்பாடுகளை பலப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் முறையான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.
- ➢ தொழில் பன்மைத்துவத்தை ஏற்படுத்துவதன் மூலம் அக்கிராமத்து மக்களுக்கு சிறுகைத்தொழில் முயற்சியை வழங்க வேண்டும்.
- ➢ ஒரு கிராமத்தின் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படுவதற்கு போக்குவரத்து மிகப் பிரதானமான ஒன்றாகும். எனவே பாதையினை ஒழுங்கு செய்யும் நடவடிக்கையினை உடன் மேற்கொள்ள வேண்டும்.
- ➢ வறுமைக் கோட்டின் கீழ் வாழும் அக்கிராமத்து மக்களுக்கு குடிநீர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தனவந்தர்கள் முன்வருவதற்கான ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.
- ➢ குறைந்தபட்சமாக பகுதிநேர அல்லது நடமாடும் வைத்தியசாலையினை நிறுவுவதற்கான செயற்திட்டத்தினை ‘கரையோர சுகாதாரப் பனிமனை’யினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
- ➢ கிராம அபிவிருத்தி தொடர்பாக மக்களை விழிப்புணர்வுட்டல்.

**உசாத்துணைகள்**

Arif, G. M. “A Study on Socio-Economic Conditions in Islamabath”. Volume-4, 348-456 pp, 2001.

Abhiman, D. “A Survey study on Socio-economic Condition in India, Reserve Bank India”. Volume-28, 313-345 pp, 1999

Thayalini, K., Jeyapiratheeba, A. (2014). சமூக பொருளாதார நிலை பற்றிய ஆய்வு: திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளிப் பிரதேச செயளாலர் பிரவினை மையப்படுத்தியது.

uthaya kumar, s.s. , rejinolt, i.(2014) யுத்தத்தால் இடம் பெயர்ந்து மீளக் குடியேறியவர்களின் வாழ்வாதாரங்களைப் பற்றிய ஓர் ஆய்வு.

வினோதினி, p. , சுபாஜினி, u. (2014). இத்தாவில் கிராமத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தி பற்றி ஆய்வு.

Myrdaland, j. (1968). Asian Drama; inquari in to the porerty of natious.

தேர்தல் இடாப்பு (2017).